மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | வா.சா. |
| பெயர் | சுந்தரராஜன் | நாள் | 16.10.2023 |
| தகப்பனார் பெயர் | அருணாச்சலம் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை :-**

12) 1ம் பிரதிவாதி மாரியம்மாள் மாரிமுத்துக்கவுண்டரின் எத்தனாவது மனைவிக்கு பிறந்தவர் என்றால், மாரிமுத்துக்கவுண்டரின் மூன்றாவது மனைவி பாப்பம்மாளுக்கு பிறந்தவர். மேற்படி, மாரிமுத்துகவுண்டருக்கு மூன்று மனைவிகளுக்கும் சேர்த்து மொத்தம் எத்தனை பெண் வாரிசுகள் என்றால் மொத்தம் 7 பெண் வாரிசுகள்.

13) கடந்த 1964ம் வருடத்தில் மாரிமுத்துக்கவுண்டரின் குடும்பத்தில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி மாரிமுத்துக்கவுண்டரின் பெண் வாரிசுகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

14) தற்போது எனக்கு என்ன வயதாகிறது என்றால் 57 வயதாகிறது. என் பிரமாண பத்திரத்தில் 8-வது பத்தியில் மேற்படி மாரிமுத்துக்கவுண்டரின் குடும்பத்தினரிடையே ய பாகப்பிரிவினை செய்த விவரம் எனக்கு தெரியும் என சொல்லிவிட்டு தற்போது என் குறுக்கு விசாரணையில் மேற்படி மாரிமுத்துக்கவுண்டரின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை குறித்து எனக்கு தெரியாது என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

( 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ன் குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.